த.வெ.க. அரசு எனும் தமிழகத்திற்கு வந்த பேரிடர்:

விலைவாசி உயர்வும் வாழ்க்கைத் தர வீழ்ச்சியும்!

தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வு பெரும் பொருளாதாரப் பேரிடராக மாறியுள்ளது. மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களின் விலை, கடந்த ஐந்து மாதங்களில் வரலாறு காணாத உச்சத்தைத் தொட்டுள்ளது. இதனால் நடுத்தர மற்றும் அடித்தட்டு வர்க்க மக்கள் கடும் அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளனர்.

ஏற்கெனவே கடும் மின்கட்டண உயர்வால் தடுமாறிக்கொண்டிருக்கும் மக்களின் தலையில், இந்த விலைவாசி உயர்வு பேரிடியாக இறங்கியுள்ளது. வருமானம் எந்த வகையிலும் உயராத நிலையில், மக்கள் தங்கள் உணவுப் பொருள் சார்ந்த அடிப்படைத் தேவைகளைக் கூடக் குறைத்துக்கொள்ள நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். இது அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்டிருக்கும் பெரும் வீழ்ச்சியாகும்.

ஆனால், த.வெ.க. அரசு மின் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு என அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பழியை 'எல் நினோ' (El Niño) பருவ நிலை மாற்றத்தின் மீது போட்டுக்கொண்டிருக்கிறது. மின் தட்டுப்பாட்டிற்கு, "தி.மு.க. காரர்கள் ஃபியூஸ் கேரியரைப் பிடுங்கிக்கொண்டு போய் விட்டார்கள்" எனப் பழிபோட்டவர்கள், இப்போது 'எல் நினோ' அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறார்கள்!

இந்த ஆண்டில் எல் நினோ தாக்கம் நீடிக்கும் என்றும், அக்டோபர் மாதத்தில் வெயில் மற்றும் மின் தேவை வழக்கத்தை விட 30% அதிகரிக்கும் என்றும் வானிலை மற்றும் பொதுத்துறை ஆய்வுகள் மூலம் முன்கூட்டியே எச்சரிக்கைகள் விடப்பட்டன. ஆனால், ஆட்சிக்கு வந்திருக்கும் அறியாமைக்கூட்டத்திற்கு இதைப் பற்றியெல்லாம் அறிவோ, அக்கறையோ இருக்கவில்லை.

மாறாக, எப்படியெல்லாம் தி.மு.க. மீது அவதூறு பரப்பலாம், அரசு எந்திரத்தை எப்படியெல்லாம் முறைகேடாகப் பயன்படுத்தலாம், முதலமைச்சர் விஜய்க்கு கடல் பார்த்த மாதிரி புதிய சட்டமன்றக் கட்டிடம் கட்டலாம், எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களை எப்படியெல்லாம் விலைக்கு வாங்கலாம் என்பதில் மட்டுமே அவர்களின் மூளை படுவேகமாக வேலை செய்கிறது. தமிழ்நாட்டு மக்கள் கடந்த சட்டமன்றத் தேர்தலில் செய்த பெரும் தவறுக்கு இப்போது கடும் விலை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பணவீக்கத்தின் உச்சம்!

தமிழ்நாட்டில் உணவு மற்றும் பானங்கள் துறையின் பணவீக்க விகிதம் 10.62% ஆக உயர்ந்து, நாட்டிலேயே மிக அதிக உணவுப் பணவீக்கம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு மாறியுள்ளது. கோதுமையை விட அரிசியை முதன்மை உணவாகக் கொண்ட தமிழ்நாட்டில், அரிசி மீதான பணவீக்க அழுத்தம் தேசிய அளவை விட ஒரு சதவீதம் அதிகமாக உள்ளது.

2026ஆம் ஆண்டின் தொடக்கம் முதலே இந்தியாவின் அதிக பணவீக்க மாநிலமாகத் தெலங்கானா நீடித்து வந்த நிலையில், செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு தெலங்கானாவை முந்தி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

● **இருமடங்கு உயர்வு:** ஜனவரி 2026இல் வெறும் 3.35% ஆக இருந்த தமிழ்நாட்டின் பணவீக்கம், செப்டம்பரில் 6.81% ஆக இருமடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளது. குறிப்பாக ஆகஸ்ட் மாதத்திலிருந்து (5.91%) செப்டம்பர் மாதத்திற்குள், ஒரே மாதத்தில் 90 அடிப்படைப் புள்ளிகள் (Basis Points) உயர்ந்துள்ளது பொருளாதார நிபுணர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

● **நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறப் பாதிப்பு:** தமிழ்நாட்டின் நகர்ப்புற பணவீக்கம் 6.5% ஆக உள்ள அதே வேளையில், கிராமப்புற பணவீக்கம் 7.17% ஆக மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது.

● **கல்வி மற்றும் இதரச் சேவைகளின் கட்டண உயர்வு:** அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமன்றி, தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்வி மற்றும் தொடக்கக் கல்விக்கான கட்டண உயர்வு (Inflation) 8.51% ஆக அதிகரித்துள்ளது. இது தேசிய சராசரியான 4.81%ஐ விட இருமடங்காகும். தனிநபர் பராமரிப்புச் செலவுகளும் (Personal Care) பிற மாநிலங்களை விட இங்கு அதிகமாக உயர்ந்துள்ளன. நடுத்தர மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சிறிய உணவகங்களில் முன்பு 80க்கு விற்ற சாப்பாடு தற்போது 120 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் தற்போதைய விலைவாசி உயர்வு என்பது வெறும் உணவுப் பொருள்களோடு நின்றுவிடாமல் கல்வி, போக்குவரத்து, எரிபொருள் மற்றும் அன்றாடச் சேவைகள் என அனைத்துத் துறைகளிலும் பரவியுள்ள ஒரு **"பரவலான பணவீக்க நெருக்கடி"** (Broadbased Inflation Crisis) ஆகும்.

அரசு மேற்கொண்ட தவறான ஒப்பந்த மாற்றங்கள், விலைக் கட்டுப்பாட்டுத் தோல்விகள் மற்றும் உரிய நேரத்திலான கொள்முதல் நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளே இந்தக் கடும் விலைவாசி உயர்வுக்கு முதன்மைக் காரணங்களாகும்.

1. மின்சார ஒப்பந்த மாற்றங்களும் கொள்முதல் குளறுபடிகளும்

நிர்வாகக் குளறுபடிகளுக்கு மிக முக்கிய உதாரணம் மின் கொள்முதல் சர்ச்சையாகும்.

● **ஒப்பந்தங்களை ரத்து செய்தல்:** தமிழக அரசு முன்பு நடைமுறையில் வைத்திருந்த மலிவான குறுகிய கால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்களை (யூனிட் ரூ.11 முதல் ரூ.20 வரை) த.வெ.க. அரசு ரத்து செய்தது.

● **அவசரக் கால டெண்டர் சொதப்பல்:** அக்டோபர் மாதத்தில் நிலவிய நீடித்த கோடை போன்ற சூழலால் மின்சாரத் தேவை திடீரென உச்சமடைந்தது. முன்கூட்டியே திட்டமிட்ட ஆந்திர அரசு, அவசர நிலை வருவதற்கு முன்பே யூனிட் 16 முதல் 20 விலையில் கொள்முதல் ஒப்பந்தங்களை இறுதி செய்தது. ஆனால், தட்டுப்பாடு உச்சமடையும் வரை காத்திருந்த தமிழ்நாடு மின் விநியோகக் கழகம் (TNPDCL), திறந்தவெளிச் சந்தையில் அவசரக் கால டெண்டர்களைக் கோரியது. இந்தக் கூடுதல் விலை கோரல் மூலம் பெரும் கமிஷன் அடிக்க திட்டமிட்டுள்ளதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன.



மனுஷ்ய புத்திரன்
மாநில ஆலோசகர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

இது குறித்து மே 17 இயக்கத்தைச் சேர்ந்த கொண்டல் ஊடக விவாதம் ஒன்றில் பின்வரும் கருத்துக்களை முன் வைக்கிறார் " ஏப்ரல் மாதத்தின் கடுமையான வெயில் காலத்தில் மின் தேவை உச்சபட்சமாகச் சுமார் 21,010 மெகாவாட்டை எட்டியது. அக்டோபர் மாத காலகட்டத்தில் உச்ச மின் தேவை சுமார் 20,000 மெகாவாட் மட்டுமே. ஏப்ரல் மாதத்தில் உச்ச தேவை இருந்தபோதே தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி மற்றும் கொள்முதல் திறன் அதைச் சமாளிக்கும் வகையில் இருந்தது; அப்போது 35 விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்படவில்லை. தனக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனும் கட்டமைப்பும் தமிழக மின்வாரியத்திடமே உண்டு. ஆனால், அது முழுமையாகப் பயன்படுத்தப்படாமல், தனியாரிடம் மின் சாரம் வாங்கும் நோக்கத்துடன் மாநிலத்தின் சொந்த உற்பத்தித் திறன் திட்டமிட்டுக் குறைக்கப் பட்டுள்ளது:

1. **வடசென்னை (அலகு 2):** 1,600 மெகாவாட் திறன் கொண்ட இதில் வெறும் 630 மெகாவாட் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.
2. **வடசென்னை (அலகு 3):** 800 மெகாவாட் திறன் கொண்ட நிலையில் 440 மெகாவாட் மட்டுமே உற்பத்தியாகிறது.
3. **உடன்குடி திட்டம்:** 660 மெகாவாட் திறனில் சுமார் 320 மெகாவாட் அளவுக்கு மேல் உற்பத்தியைத் தாண்ட விடுவதில்லை.
4. **காடம்பாறை நீர்மின் நிலையம்:** 400 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய வசதி இருந்தும், மின் உற்பத்தி செய்யப்படாமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாகச் சொந்த உற்பத்தி நிலையங்களில் சுமார் 2,000 மெகாவாட் வரை உற்பத்தியைக் குறைத்து வைத்துவிட்டு, பற்றாக்குறை நிலவுவதாகக் காட்டப்படுகிறது." என்கிறார்.

மின்சாரமும் பெட்ரோல் போன்றதுதான். பெட்ரோல் விலை உயர்ந்தால் அடிப்படைப் பொருள்களின் விலை உயர்வது போலவே, மின்கட்டண உயர்வினாலும் விலைவாசி உயரும். நாட்டின் மிக உயர்ந்த விலைக்கு மின்சாரம் வாங்குவதால், மின்சார வாரியத்திற்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. இந்த கூடுதல் செலவுகள் மற்றும் மின்கட்டண உயர்வு, உற்பத்தித் துறையினரையும் சிறு வணிகர்களையும் பாதித்து, மறைமுகமாக அனைத்துப் பொருள்களின் விலையும் இன்னும் உயர வழிவகுக்கும்.

2. விலைக் கட்டுப்பாட்டுத் தோல்விகள்!

சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் செயற்கையான விலை உயர்வைத் தடுப்பதில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முற்றிலும் தவறிவிட்டது.

● **கண்காணிப்புக் குறைபாடு:** தக்காளி, வெங்காயம், பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை கிடுகிடுவென உயர்ந்தபோது, சந்தையில் பதுக்கல்களைத் தடுக்கவோ அல்லது மொத்த விற்பனையாளர்களின் விலையை முறைப்படுத்தவோ அரசுத் தரப்பில் போதிய சிறப்புப் படைகளோ (Special Squads) தீவிர சோதனைகளோ நடத்தப்படவில்லை.

இதனால் நுகர்வோர் சந்தையில் சில்லறைப் பணவீக்கம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மிக அதிக அளவாக (10.62% உணவுப் பணவீக்கம்) உயர்ந்துள்ளது.

3. பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதல் டெண்டர் தாமதம்!

பொது விநியோகத் திட்டத்தின் (Ration / PDS) கீழ் நுகர்வோருக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களின் கொள்முதலில் ஏற்பட்ட காலதாமதம், சில்லறைச் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நியாயவிலைக் கடைகளுக்குத் தேவையான துவரம்பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதல் செய்வதற்கான புதிய டெண்டர்களைத் தமிழக அரசு உரிய நேரத்தில் கோரவில்லை. அண்டை மாநிலங்கள் தங்களுக்குத் தேவையான பருப்பு மற்றும் எண்ணெய்யை முன்கூட்டியே மொத்த விலையில் கொள்முதல் செய்து கையிருப்பில் வைத்திருந்தன.

ஆனால், தமிழக அரசு ரேஷன் கடைகளில் விநியோகம் முற்றிலும் நின்றுபோய், வெளிச்சந்தையில் அவற்றின் பற்றாக்குறையும் விலையும் உச்சமடையும் வரை காத்திருந்து, தாமதமாகவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (TNCSC) மூலம் டெண்டர்களைக் கோரியது.

தாமதமாகக் கோரப்பட்டதால், தனியார் நிறுவனங்கள் மிக அதிக விலையைக் குறிப்பிட்டன. இதனால் வெளிச்சந்தையின் மொத்த விலையை விடக் கூடுதல் பிரீமியம் விலை கொடுத்து அரசு பருப்பு மற்றும் பாமாயிலை வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இந்தத் தாமதத்தால் சில்லறைச் சந்தையிலும் பற்றாக்குறை ஏற்பட்டு, சில்லறை உணவுப் பணவீக்கம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மிக அதிகமாக உயர இது நேரடியாகக் காரணியாக அமைந்தது.

கொள்முதல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட இந்தக் காலதாமதத்தால், விநியோகத்தில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு, பொருள்களின் சந்தை விலை மக்களின் கைமீறிப் போகும் அளவிற்குத் தீவிரமடைந்தது. விவசாயிகளிடமிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் அத்தியாவசியப் பொருள்களை உரிய காலத்தில் கொள்முதல் செய்யத் தவறியது விநியோகச் சங்கிலியைப் (Supply Chain) வெகுவாகப் பாதித்துள்ளது.

நிர்வாகச் செயலிழப்பும் பேரிடர் அரசும்!

இவற்றைப் பற்றியெல்லாம் எந்தக் கவலையும் இல்லாமல், எல்லாவற்றிற்கும் தி.மு.க. அரசு மீதும், இப்போது 'எல் நினோ' மீதும் பழியைப் போட்டுத் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஊழல் மற்றும் கையாலாகாத்தனத்தின் மொத்த உருவமாக இந்த அரசு மாறியுள்ளது.

திறமையற்ற முதலமைச்சரும் அமைச்சர்களும் இன்று மக்களை வாட்டி வதைக்கும் கோமாளி ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். திறமையான அதிகாரிகள் முடக்கப்பட்டு அரசு நிர்வாகமும் செயலிழந்துள்ளது.

எல் நினோ காரணமாக வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து பெரும் மழைப்பொழிவு ஏற்படலாம் என வானிலையாளர்கள் எச்சரிக்கின்றனர். அப்படி நடந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும், தங்கள் தோல்வியை மறைக்க எல் நினோ மீதுதான் பழிபோடப் போகிறார்கள்.

உண்மையில், தமிழகத்திற்கு வந்த மிகப்பெரிய பேரிடரே இந்த த.வெ.க. அரசுதான்!

செஞ்சி அருகே 4 நாட்களாக மாயமான

7 வயது சிறுமியின் பெற்றோருக்கு - முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆறுதல்!

செஞ்சி, அக். 16 - செஞ்சி அருகே 4 நாட்களாக மாயமான 7 வயது சிறுமியின் பெற்றோருக்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த ஆலம் பூண்டி ஊராட்சி நடுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஹேமாவதி கடந்த 12ஆம் தேதி வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது மாயமானார். சிறுமி மாயமாகி 4 நாட்கள் ஆகியும் இதுவரை எந்த துப்பும் கிடைக்காததால் போலீசார் தீவிர விசாரணை நடத்தி சிறுமியை தேடி வருகின்றனர்.

இந்நிலையில் சிறுமியின் வீட்டிற்கு நேரில் சென்ற விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். தொடர்ந்து சம்பவ இடத்தில் இருந்த செஞ்சி டி.எஸ்.பி. ரமேஷ் ராஜிடம் இச்சம்பவம் குறித்து கேட்டறிந்த அவர், காவல்துறையினர் பல்வேறு கோணங்களில் விசாரணையை துரிதப்படுத்தி மாயமான சிறுமியை உயிருடன் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், செஞ்சி மத்திய ஒன்றியச் செயலாளர் விஜயராகவன், ஒன்றிய அவைத் தலைவர் வாசு மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய கவுன்சிலர் கேமல், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி, ஊராட்சி மன்றத் தலைவர் முத்தம்மாள் சேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தீபநாதன், உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே 4 நாட்களாக மாயமான 7 வயது சிறுமியின் பெற்றோருக்கு, விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மத்திய ஒன்றியச் செயலாளர் விஜயராகவன், ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய கவுன்சிலர் கேமல் ஆகியோர் உள்ளனர்.

நாகர்கோவில் மாநகர தெற்குப் பகுதி

52 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

குமரி, அக். 16- கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி, 52 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 52 வது வட்ட கழக செயலாளர் குணசேகரன் தலைமையில், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி செயலாளர் த.ஜீவா முன்னிலையில் 14.10.2026, புதன் கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் தெங்கம் புதூர், அஞ்சுகுடியிருப்பு பகுதியில் வைத்து நடை பெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் டி.தங்கதுரை, கழக நிர்வாகிகள் ஆர்.சண்முக ராஜன், வில்சன் சாம், கே.ஜெயபாலன், பால்ராஜ், எஸ்.சந்திரசேகர், எஸ்.சுயம்பேசன், எஸ்.முருகன், எஸ்.கணேசன், ஜஸ்டின், கே.ரமேஷ்குமார், எஸ்.பாரத், தாஸ், சுரேந்திரன், பாரதி, சுடலைகண், தெளபிக் உட்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தீர்மானம்: 1

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழகத் தலைவர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதிக் கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.